# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 46/ந/2026, நாள் 03.09.2026

இரா. மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
பவானி நகராட்சி, ஈரோடு மாவட்டம்.

2. கட்டிட உரிமையாளர்,
ஆதித்யா மருத்துவமனை,
பவானி, ஈரோடு மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்

மதுரை மாவட்டம், புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 A, முதல் மாடி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மயில்சாமி என்பவரின் 14.02.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.02.2026 அன்று பெறப்பட்டு, 46/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, பிளாட் எண்.5 A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மயில்சாமி என்பவரின் 14.02.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:

மதுரை மாநகர், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5–ல் குடியிருந்து வரும் நான் சமூக ஆர்வலரும் மற்றும் நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நலச்சங்கம் பதிவு எண்.19/2025ன் செயலாளரும் ஆவேன். மக்களுக்கு பல நலத்திட்டங்களை அரசிடம் பெற்று தந்துள்ளேன். அரசுக்கு சொந்தமான பல கோடி மதிப்புள்ள சொத்துக்களை மீட்டெடுத்துள்ளேன். நீர்நிலைகளில் கட்டப்பட்ட பல கட்டிடங்களை அகற்ற மாண்புமிகு நீதிமன்றங்களில் பல வழக்குகள் தொடுத்து அகற்றியுள்ளேன்.

ஈரோடு மாவட்டம் பவானி தாலுகா மற்றும் நகராட்சிக்கு உட்பட்ட எண்.1, 5–வது தெரு வர்ணபுரம் பகுதியில் உள்ள ஆதித்யா மருத்துமனை கட்டிடம் தரைதளம் 885 சதுரடிகள் மற்றும் முதல் தளம் 885 சதுரடிகள் குடியிருப்பு மனை கட்டுவதற்கு அனுமதி பெற்று கொண்டு வர்த்தக கட்டிடமாக சட்டத்திற்கு புறம்பாக மூன்று மாடிகள் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை கூடுதல் கட்டிடங்கள் 2730 சதுரடிகள் வீதம் மூன்று தளங்களும் கட்டபட்டு உள்ளது. உரிய பக்க இடைவெளி (SIDE SET BACK) ஆறு மீட்டர் இடைவெளி விடவில்லை. ஒரு பக்கம் 1 அடி, 3, மற்றும் 2அடிவீதம் விடப்பட்டு ஒரு பகுதியில் இடம் விடவில்லை. கார் பார்க்கிங் இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56, 57ன் கீழ் உரிய அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டுகிறேன். மேலும் எனது புகார் மனு 07.02.2026 தேதி மனுவில் கூறப்பட்ட ஆதித்யா மருத்துவமனை கட்டிடத்தினை அகற்ற வேண்டுகிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பாவானி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.0364/2026/எப்1, நாள் 19.03.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

''பவானி நகராட்சிக்குட்பட்ட வர்ணபுரம் 1 மற்றும் 5ஆம் வீதியில் அமைந்துள்ள ஆதித்யா மருத்துவமனை கட்டிடம் கட்டிட விதிகளுக்கு புறம்பாக அமைந்துள்ளதாக இரா. மயில்சாமி அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

அதன்படி அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 05.11.2022ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சி பொறுப்பு நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளதால் இம்முறையீட்டு மனு தொடர்பாக நடவடிக்கை எடுக்க தேர்தல் பணி முடியும் காலம் வரை கூடுதல் அவகாசம் வேண்டி பணிந்து அனுப்பப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான பவானி நகராட்சி ஆணையர் மற்றும் கட்டிட உரிமையாளர் ஆகியோரை 01.07.2026 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 18.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மேற்படி அழைப்பாணையின்படி 01.07.2026 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. அவரிடமிருந்து எந்த தகவலும் பெறப்படவில்லை.

6. எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் (முகூபொ) கடிதம் ந.க. எண்.364/2026/எப்1, நாள் 23.06.2026ல், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஆணையாளர் 30.04.2026ல் ஒய்வு பெற்று விட்டதால் தற்போது சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார். எனவே ஆணையாளருக்கு பதிலாக இவ்வலுவலக நகரமைப்பு ஆய்வாளர் (பொ) திரு.மு.முகிலன் என்பவர் நேரில் ஆஜராவார் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்''.

7. எதிர்மனுதாரர் தரப்பில் பவானி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 01.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை (UD 4(1)) நாள் 05.11.2020 மற்றும் அரசாணை நிலை எண்.07, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD 1u) நாள் 10.01.2023இன்படி பவானி நகராட்சி அலுவலக அறிவிப்பு 01/2022/TP1 நாள் 16.03.2026ன்படி முதல் அறிவிப்பு வழங்கப்பட்டு 29.04.2026 அன்று நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு 29.04.2026ல் படிவம் III அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் ஆதித்யா மருத்துவமனை உரிமையாளர் Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு 15.06.2026ல் மேல் முறையீடு செய்துள்ளதன் நகல் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட முறையீடு தொடர்பாக சம்மந்தப்பட்ட துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு முறையீடு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து அதனடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்திற்கு 15 தினங்களுக்குள் தகவல் தெரிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறோம்.".

8. இரண்டாம் எதிர்மனுதாரரான ஆதித்தியா மருத்துவமனை இயங்கி வரும் கட்டிட உரிமையாளர் திரு.T.S. அன்பரசு அவர்களின் நாளிடப்படாத கடிதத்தில் 01.07.2026 அன்று தன்னால் தவிர்க்க முடியாத மிக முக்கியமான மற்றும் அவசரமான அலுவலல் பணி (வேலை) காரணமாக சென்னைக்கு நேரில் வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விசாரணைக்கு நான் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளித்து, எனக்குப் பதிலாக இந்த வழக்கு மற்றும் கட்டிடம் தொடர்பான முழு விபரங்களையும் அறிந்த எனது தந்தையார் திரு. K.U தங்கவேல் அவர்கள் சமர்ப்பிக்கும் விளக்கங்களையும் ஆவணங்களையும் ஏற்றுக்கொண்டு விசாரணையை நடத்திட கேட்டுக்கொண்டுள்ளார்.

9. அதன்படி இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு. K.U தங்கவேல் அவர்கள் 01.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எங்களது மருத்துவமனை கட்டிடத்திற்கு 2011லேயே முறையாக நகராட்சியிடம் அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டுள்ளது. எங்களது கட்டிடத்தில் விதிமீறல்கள் ஏதுமில்லை. எங்கள் மருத்துவமனைக்கு வந்து செல்லும் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் எந்தவித இடையூறும் இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வரும் நிலையில் எங்களது மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

மேலும் நாங்கள் எங்களது கட்டிடம் வரன்முறை செய்துகொள்வதற்காக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 (Town and Country Planning Act, 1971) பிரிவு 80–Aன்படி 15.06.2026 அன்று அரசுக்கு மேல் முறையீடு செய்து அதற்கான ஒப்புதல் வரப்பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். சம்மந்தப்பட்ட துறையில் இருந்து பெறப்பட்டுள்ள ஒப்புகை அட்டையின் நகல் இணைத்துள்ளேன்." என தெரிவித்துள்ளார்.

10. இரண்டாம் எதிர்மனுதாரர் திரு. த.சு. அன்பரசு (கட்டிட உரிமையாளர்) தனது 20.06.2026 நாளிட்ட கடிதத்தில் செயலாளர், தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் வீட்டுவசதி துறை, சென்னைக்கு முகவரியிட்டு அதன் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அதில்:–

“ நாங்கள் மேற்கண்ட முகவரியில் கடந்த 15 ஆண்டுகளாக குடியிருந்து கொண்டு மருத்துவமனையும் நடத்தி வருகிறோம். மேற்படி கட்டிடத்திற்கு எங்களால் நாளது தேதி வரை சொத்து வரி, தொழில்வரி, குடிநீர் வரி மற்றும் அவ்வப்போது நகராட்சியால் விதிக்கப்படும் அனைத்து வரிகளும் எங்களால் நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி எங்களது கட்டிடத்திற்கு தரைதளம், முதல்தளம், ஆகியவற்றிற்கு முறையாக பவானி நகராட்சியிடம் 2011ஆம் ஆண்டு அனுமதி பெற்றுள்ளோம். நடைமுறையில் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான வசதியினை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு மற்றும் மூன்றாம் தளம் எங்களால் கட்டப்பட்டு உள்ளது. மேற்கண்ட இரண்டு தளங்களையும் வரன்முறைபடுத்த 2013ஆம் ஆண்டு பவானி நகராட்சியிடம் விண்ணப்பித்து இருந்தோம்.

நாளது தேதி வரை தரைதளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் ஆகியவற்றிற்கு முறையாக சொத்து வரி (வணிக பயன்பாட்டுக்கும்) தொழில் வரி, குடிநீர் வரி மற்றும் அவ்வப்போது பவானி நகராட்சியால் விதிக்கப்படும் வரிகளை நிலுவையின்றி செலுத்தி வருகிறோம் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி கட்டிடத்திற்கு கார் பார்க்கிங் வசதி (அண்டர் கிரௌண்ட்) செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் எங்களது மருத்துவமனைக்கு வந்து செல்கின்றவர்களுக்கு எந்தவித சிரமும் இல்லை. மேலும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏதும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே எங்களது மேற்கண்ட கட்டிடத்தில் இரண்டு மற்றும் மூன்றாம் தளத்தினை வரன்முறை செய்து கொள்ள விரும்புகிறோம். தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு நடக்கிறோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி எங்களது கட்டிடத்தினை Tamil Nadu Town and Country Planning Act, 1971 பிரிவு 80–A-ன்படி நாங்கள் தங்களிடம் மேல்முறையீடு செய்கிறோம். எங்களது கட்டிடத்திற்கு வரன்முறை செய்து கொள்ள அரசுக்கு கட்டணம் செலுத்த வேண்டியதிருப்பின் அதனையும் நாங்கள் செலுத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி கட்டிடத்திற்கு ஏற்கனவே நாங்கள் பவானி நகராட்சியிடம் பெற்றிருக்கும் அனுமதியின் நகல்களை தங்களது பார்வைக்காக இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளோம்.” எனத் தெரிவித்துள்ளார்

11. மனுதாரரின் புகார்மனு, எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் 2ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளரின் கடிதம், அவரது சார்பில் ஆஜரான அவரது தந்தையின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் நகராட்சிக்குட்பட்ட எண்.1, 5–வது தெரு, வர்ணபுரம் பகுதியில் உள்ள ஆதித்யா மருத்துவமனை கட்டிடம் தரைதளம் 885 சதுர அடிகள் மற்றும் முதல் தளம் 885 சதுர அடிகள் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுவிட்டு வர்த்தக கட்டிடமாக சட்டத்திற்கு புறம்பாக மூன்று மாடிகள் கட்டப்பட்டுள்ளது என்றும், அம்மருத்துவமனை கூடுதல் கட்டிடங்கள் 2730 சதுர அடிகள் வீதம் மூன்று தளங்களும் கட்டப்பட்டுள்ளது என்றும், உரிய பக்க இடைவெளி (side set back) ஆறு மீட்டர் இடைவெளி விடப்படவில்லை என்றும், ஒரு பக்கம் 1 அடி, 3 மற்றும் 2அடி வீதம் விடப்பட்டு ஒரு பகுதியில் இடம் விடவில்லை எனவும், கார் பார்க்கிங் இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தை தமிழ்நாடு நகர் ஊரமைப்புசட்டம், 1971 பிரிவு 56, 57ன் கீழ் உரிய அமலாக்க நடவடிக்கை எடுத்து மேற்படி மருத்துவமனையை அகற்ற நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார் என்பது அவரது மனுவில் இருந்து அறிய முடிகிறது.

ஆதித்யா மருத்துவமனைக்கு அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD 4(1)) நாள் 05.11.2020 மற்றும் அரசாணை நிலை எண்.07, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD 1u) நாள் 10.01.2023ன்படி பவானி நகராட்சி அலுவலக அறிவிப்பு 01/2022/TP 1 நாள் 16.03.2026ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டு, 29.04.2026 அன்று நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு 29.04.2026ல் படிவம் III அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதும், மேலும் ஆதித்யா மருத்துவமனை உரிமையாளர் Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு 15.06.2026ல் மேல் முறையீடு செய்துள்ளதன் நகல் பவானி நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளதும், அரசுக்கு முறையீடு செய்துள்ளது தொடர்பாக சம்மந்தப்பட்ட துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு முறையீடு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து இம்முறைமன்ற நடுவத்திற்கு 15 தினங்களுக்குள் தகவல் தெரிவிக்கப்படும் என்பதும் பவானி நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஆதித்யா மருத்துவமனை கட்டிடத்திற்கு 2011ம் ஆண்டிலேயே முறையாக நகராட்சியிடம் அனுமதி பெறப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், கட்டிடத்தில் விதிமீறல்கள் ஏதுமில்லை என்பதும், மருத்துவமனைக்கு வந்து செல்லும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எந்தவித இடையூறும் இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேலும் மருத்துவமனை கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்வதற்காக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 80–Aன்படி 15.06.2026 அன்று அரசுக்கு மேல் முறையீடு செய்து அதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான அவரது தந்தையின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மேலும் 01.07.2026 அன்றைய விசாரணையில் பவானி நகரமைப்பு ஆய்வாளரால் ஆதித்யா மருத்துவமனையின் உரிமையாளர் Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதை, பவானி நகராட்சி உதவியாளர் திரு.து.வெங்கடேசன் என்பவர் மூலமாக அரசு செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையில் சம்மந்தப்பட்ட பிரிவில் கோரப்பட்டபோது மனுதாரரின் மேல்முறையீட்டு மனு வரப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பவானி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.364/2026/எப்1, நாள் 22.08.2026ல் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

“9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of the individuals. xxx xxx xxx”.

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதாகவும், அதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், இது குறித்து சம்மந்தப்பட்ட துறையில் கட்டிட உரிமையாளரின் மேல்முறையீட்டு மனு அரசுக்கு வரப்பெற்றுள்ளதாக

பவானி நகராட்சி ஆணையர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ள நிலையில், அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பவானி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, செப்டம்பர், திங்கள் 03–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. மயில்சாமி,
செயலாளர்,
நீர் நிலைகள் மற்றும் சுற்றுசூழல் பாதுகாப்பு நலச்சங்கம்,
பதிவு எண்.19/2025,
5/A, முதல் மாடி, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,மதுரை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
பவானி நகராட்சி,
பவானி, ஈரோடு மாவட்டம்

3) கட்டிட உரிமையாளர்,
ஆதித்யா மருத்துவமனை,
5–வது தெரு, வர்ணபுரம்,
பவானி, ஈரோடு மாவட்டம்

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.